# நவம்பர் – 23 – வியாழன்

## புனித முதலாவது கிளமண்ட்

**துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள்: உங்களைக் காத்திடுவேன்: திபா. 50:15**

## முதல் வாசகம் : 1 மக்கபேயர் 2 : 15 - 29

இதற்கிடையில் கடவுளைப் புறக்கணிக்குமாறு யூதர்களைக் கட்டாயப்படுத்துவதற்காக மன்னன் ஏற்படுத்திய அலுவலர்கள், மக்களைப் பலிசெலுத்த வைக்கும்படி மோதயின் நகருக்குச் சென்றார்கள். இஸ்ரயேல் மக்களுள் பலர் அவர்களிடம் போய்ச் சேர்ந்தனர். மத்தத்தியாவும் அவருடைய மைந்தர்களும் தனியே கூடிவந்தார்கள். மன்னனின் அலுவலர்கள் மத்தத்தியாவை நோக்கி, "நீர் இந்த நகரத்தில் மதிப்பிற்குரிய பெருந்தலைவர். உம் மைந்தர்கள், சகோதரர்களுடைய ஆதரவு உமக்கு உண்டு. ஆதலால் இப்பொழுது நீர் முன்வாரும் பிற இனத்தார், யூதேயா நாட்டு மக்கள், எருசலேமில் எஞ்சியிருப்போர் ஆகிய அனைவரும் செய்தவண்ணம் நீரும் மன்னரின் கட்டளையை நிறைவேற்றும். அப்படியானால் நீரும் உம் மைந்தர்களும் மன்னரின் நண்பர்கள் ஆவீர்கள் பொன், வெள்ளி மற்றும் பல்வேறு பரிசுகளால் சிறப்பிக்கப் பெறுவீர்கள்" என்று கூறினார்கள். அதற்கு மறு மொழியாக மத்தத்தியா உரத்த குரலில், "மன்னரின் ஆளுகைக்கு உட்பட்ட எல்லா மக்களினத்தாரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் மூதாதையரின் வழிபாட்டு முறைகளைக் கைவிட்டு, அவருடைய கட்டளைகளை நிறைவேற்ற இசைந்தாலும், நானும் என் மைந்தர்களும் சகோதரர்களும் எங்கள் மூதாதையரின் உடன்படிக்கையின்படியே நடப்போம். திருச்சட்டத்தையும் அதன் விதிமுறைகளையும் நாங்கள் கைவிட்டு விடுவதைக் கடவுள் தடுத்தருள்வாராக! மன்னரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மாட்டோம் எங்கள் வழிபாட்டு முறைகளினின்று சிறிதும் பிறழமாட்டோம்" என்று கூறினார். மத்தத்தியா இச்சொற்களைக் கூறி முடித்ததும், மன்னரின் கட்டளைப்படி மோதயின் நகரத்துப் பீடத்தின் மேல் பலியிட யூதன் ஒருவன் எல்லாருக்கும் முன்பாக வந்தான். மத்தத்தியா அதைப் பார்த்ததும் திருச்சட்டத்தின்பால் கொண்ட பேரார்வத்தால் உள்ளம் கொதித்தெழுந்தார் முறையாக சினத்தை வெளிக்காட்டி அவன்மீது பாய்ந்து பலிபீடத்தின்மீதே அவனைக் கொன்றார். அதே நேரத்தில், பலியிடும்படி மக்களை வற்புறுத்திய மன்னனின் அலுவலனைக் கொன்று பலிபீடத்தையும் இடித்துத் தள்ளினார். இவ்வாறு சாலூவின் மகன் சிம்ரிக்குப் பினகாசு செய்ததுபோல, திருச்சட்டத்தின்பால் தாம் கொண்டிருந்த பேரார்வத்தை மத்தத்தியா வெளிப்படுத்தினார். பின்னர் மத்தத்தியா நகரெங்கும் சென்று, "திருச்சட்டத்தின்பால் பேரார்வமும் உடன் படிக்கைமீது பற்றுதியும் கொண்ட எல்லாரும் என் பின்னால் வரட்டும்" என்று உரத்த குரலில் கத்தினார். அவரும் அவருடைய மைந்தர்களும் நகரில் இருந்த தங்கள் உடைமைகளையெல்லாம் விட்டுவிட்டு மலைகளுக்குத் தப்பியோடினார்கள். அப்போது நீதி நேர்மையைத் தேடிய பலர் பாலைநிலத்தில் தங்கிவாழச் சென்றனர்.

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப் படுத்துவோர்
கடவுள் தரும் மீட்பைக் கண்டடைவர்

## நற்செய்தி : லூக்கா 19 : 41 - 44

இயேசு எருசலேம் நகரை நெருங்கி வந்ததும் அதைப் பார்த்து அழுதார். "இந்த நாளிலாவது அமைதிக்குரிய வழியை நீ அறிந்திருக்கக்கூடாதா? ஆனால் இப்போது அது உன் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. ஒரு காலம் வரும். அப்போது உன் பகைவர்கள் உன்னைச் சுற்றி அரண் எழுப்பி, உன்னை முற்றுகையிடுவார்கள். உன்னையும் உன்னிடத்திலுள்ள உன் மக்களையும் எப்பக்கத்திலுமிருந்து நெருக்கி அழித்து உன்னைத் தரை மட்டமாக்குவார்கள் மேலும் உன்னிடம் கற்கள் ஒன்றின்மீது ஒன்று இராதபடி செய்வார்கள். ஏனெனில் கடவுள் உன்னைத் தேடி வந்த காலத்தை நீ அறிந்து கொள்ளவில்லை" என்றார்.

**தியானம்:** இயேசுவின் போதனையைக் கேட்டு அவர் செய்த வல்ல செயல்களைக் கண்டவர்கள் சிறிதளவாவது பலன் தந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவருடைய வார்த்தைகள் வாழ்வு தரும் வார்த்தைகள் (யோவான் 6:63) அப்பட்டியிருக்கும் போது ஒரு பயனும் தராமல் வாழக்கூடிய வாழ்க்கை கிறிஸ்துவுக்கு உகந்த வாழ்க்கையாக இருக்க முடியாது . நீங்கள் மிகுந்த கனிதந்து என் னுடைய சீடராக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய தந்தைக்கு மாட்சியளிக்கின்றது என்பார். இறைவார்த்தையை கேட்டு இறைவழி நடக்க நமக்கு இறைவன் எப்பொழுதும் அழைப்பு விடுகிறார். பல காலங்களில் மனிதன் இறைவனை மறந்து வாழ்வதும் இறை உணர்வை விட்டு அகன்று போவதும் காலத்தின் கோலமாக இருக்கின்றது. இறைவனை மறவாமல் வாழ்வதே இறை உணர்வாகும். இறைவனுக்கு சொந்தமானவர்கள் அன்பிற்கு உரிமையானவர்கள். இறைவனின் நற்செயலைப் புறக்கணிப்பதால், இறையன்பை எதிர்ப்பதால் இறைவனின் கண்ணீருக்கு காரணம் ஆகின்றனர். அதனால் இறைவன் கண்கலங்குகின்றார். இறைவார்த்தையை கேட்போம். இதயத்தில் ஏற்றுபலன் தரும் வாழ்க்கை வாழ்வோம். அதன் வழியாக பரமனின் அருளை நிறைவாகப் பெறுவோம்.